திரு. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் ஒரு வறட்சி மாவட்டம், மிகவும் பின்தங்கிய மாவட்டம் என்பது எல்லோரும் அறிந்த விஷயம். இங்கு ஒரு தொழிற் கல்லூரி அமைப்பது சம்பந்தமாக ஆலோசனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது எங்கு, எப்போது அமைக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அதற்கு என அமைக்கப்பட்ட ஒரு ஆலோசனைக் குழு இந்த பாலிடெக்னிக்கை அமைப்பதற்கான இடங்களாக ஓசூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி ஆகிய இடங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே ஸ்டேட் இன்டஸ்ட்ரியல் புரோமோஷன் கார்ப்பரேஷன், தமிழ்நாடு அவர்கள் ஓசூரில் நிறுவுவது நலமென்று பரிந்துரை செய்திருக்கிறார்கள்.

## தமிழக நூலகங்களிலிருந்து அகற்றப்பட்ட புத்தகம்

* 472 வினா—திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) தமிழகத்தின் முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் எழுதிய 'நெஞ்சுக்கு நீதி' என்ற நூல் அவசரநிலை அமுலில் இருந்த காலத்தில் நூலகங்களிலிருந்து அகற்றப்பட்டது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், மீண்டும் அதனை நூலகங்களில் இடம் பெறச் செய்ய இந்த அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடம் இல்லை.

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, சிறிய நூலகங்களாக இருக்கின்ற டிஸ்ட்ரிக்ட் லைப்ரரி பிரான்சுகளிலும், மாநகராட்சி நூலகங்களிலும் இந்த நூல் கிடைக்கப் பெறுவதில்லை என்று சொல்லப்படுகிறது. இந்த இடங்களில் எல்லாம் இந்த நூல் கிடைக்க ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அப்படி ஒரு யோசனை இல்லை.

1978 மார்ச் 9]

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, நெருக்கடி நிலைமைகாலத்தில் இம்மாதிரியான நூல்கள் எந்தெந்த நூல்கள் அரசு நூலகங்களிலிருந்து அகற்றப்பட்டன? அப்படி அகற்றப் பட்ட நூல்களில் எவை எவை மீண்டும் அனுமதிக்கப்பட்டிருக் கிறது என்று அறிய இயலுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, தனிக்கேள்வி போட்டால் அது இயலும்.

## ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தமைத்தல்.

*473 வினு— திரு. எஸ். ஜே. இராமசாமி, திரு. என். கிட்டப்பா, திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடை யளிப்பாரா—

தமிழ்நாட்டில் பெரிய ஒன்றியங்களிலுள்ள ஊராட்சிகளை சிறிய ஒன்றியங்களுடன் இணைக்கும் திட்டம் எத்தனை ஒன்றியங் களில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இதுபோன்ற செயற் குறிப்புகள் எதுவும் இப்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, நமது தமிழ்நாட்டில் சில ஒன்றியங்கள் பல ஊராட்சிப் பகுதிகளை உள்ளடக்கிய ஒன்றி யங்களாக அதாவது 60க்கு மேற்பட்ட ஊராட்சிகளை உள்ளடக்கிய தாகவும், சில ஒன்றியங்கள் 25, 30 ஊராட்சி மன்றங்களை உள்ளடக்கியதாகவும் இருப்பதை நாம் எல்லோரும் அறிவோம். அந்த நிலையை மாற்றி கிட்டத்தட்ட, பொதுவாக சிறிய அளவில் வித்தியாசம் இருக்கக்கூடிய நிலையிலுள்ள ஊராட்சி ஒன்றியங்க ளாக இனியேனும் மாற்றியமைப்பதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அவ்வாறு திருத்தி அமைக்க வேண்டுமென்ற கருத்து அரசின் பரிசீலனையில் இருக்கிறது. திருவரங்கம், மோகனூர், அறந்தாங்கி போன்ற பஞ்சாயத்து ஒன்றியங்கள் திருத்தியமைக்கப்படுகின்ற கருத்து அரசின் ஆய்வில் இருக்கிறது.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, நாகை பஞ்சாயத்து யூனியன் 54 பஞ்சாயத்துக்கள் கொண்டதாக இருப்பதாலும், அது ஒரு கடைமடைப் பகுதியாக உள்ள பஞ்சாயத்து யூனியனாக இருக்கின்ற காரணத்தினாலும், அட்மினிஸ்ட்ரே ஷன் முறைப்படி நடத்தப்பட முடியவில்லை. ஆகவே, இருக்கிற